O.S. No.109/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:24.11.2025

P.W.1:ஜெயபாண்டியன் த/பெ– பரமசிவம்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) நான் டிப்ளமோ எலட்ரிக் இன்ஜினியர் படித்துள்ளேன். வாதி நிறுவனத்தில் டிரஸ்டியாக நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு எலக்டிரிக்கல் சம்மந்தப்பட்ட வேலை பார்த்து வந்தேன். 2004 ம் வருடம் வாதி டிரஸ்டில் பொறுப்பில் சேர்ந்தேன். பிரதிவாதிகள் அனைவரும் வாதி டிரஸ்டில் உறுப்பினர்கள் என்றால் இல்லை. வாதி டிரஸ்ட் பொதுவான டிரஸ்ட் என்றால் சரிதான். ஸ்ரீமான் நாராயண மடம் பணிக்கர் சமுதாயத்திற்கு மேற்படி டிரஸ்ட் பாத்தியப்பட்டதாகும். ஸ்ரீமான் நாராயண மடம் பணிக்கர் டிரஸ்டில் பிரதிவாதிகள் எனக்கு முன்பு தலைவர், நிர்வாக குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் 2004 ம் வருடத்தில் இருந்து தற்போது வரை வாதி டிரஸ்டில் பொறுப்பில் உள்ளேன்.

2) வாதி டிரஸ்டின் நோக்கம் டிரஸ்ட் வருமானத்தின் மூலம் டிரஸ்டிக்கு பாத்தியப்பட்ட கோவில்களை பராமரித்தும் மற்றும் சமுதாய மாணவர்களுக்கு உதவி தொகை வழங்கி வருகிறோம்.எங்கள் டிரஸ்டில் 5 வருடத்திற்கு ஒருமுறை ஒன்று கூடி கணக்கு வழக்குகளை சரிபார்க்க வேண்டும் என்றால் சரிதான், வா.சா.ஆ.1 ன் படி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரவு செலவு கணக்குகளை ஒப்படைத்து, பணிக்கர் டிரஸ்ட் மற்றும் நிர்வாகி மற்றும் உறுப்பினர்களை அழைத்து 15 நாட்களுக்குள் அழைப்பாணை அனுப்பி தேர்தல் நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) வா.சா.ஆ.1ன் படி நிர்வாகிகளில் இந்துக்கள் 3 நபர்களும், கிறிஸ்தவர்கள் 3 நபர்களும் நிர்வாகத்தில் இடம்பெற வேண்டும் என்று கண்டுள்ளளது என்றால் அது பற்றி தெரியவில்லை. வா.சா.ஆ.1ன் படி நாங்கள் செயல்பட்டு வருகிறோம். வா.சா.ஆ.1ன் படி வாதி டிரஸ்ட் செயல்பட்டு வருகிறது என்றும், அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் வா.சா.ஆ.1 Scheme decree ன் படி செயல்படாமல் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. வாதி டிரஸ்டில் நானும், தாஸ், குமார், ஸ்டாலின் பாபு, மாணிக்கம் ஆகியோர்கள் தற்போது டிரஸ்டியாக உள்ளோம். பழனிச்சாமி என்ற டிரஸ்டி இறந்துவிட்டார். 19.08.2025ம் தேதிய தீர்மான நகலை நான் தான் பூர்த்தி செய்து வந்து தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

4) டிரஸ்ட் சம்மந்தமாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களில் பிரதிவாதிகளுக்கும், எங்களுக்கும் இடையேயான வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம் ஆகியவற்றில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி உள்ளேன் என்றும், அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. O.S.No.49/2023 வழக்கில் வாதி டிரஸ்ட் 2ம் பிரதிவாதி என்றால் தாவா வழக்கிற்கும், அந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. நாங்கள் போட்ட தீர்மானம் செல்லாது என அறிவிக்கோரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ரஞ்சித் சிங் மற்றும் சண்முககனி ஆகியோர் O.S.No.39/2018 தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா வழக்கிற்கும், அந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

5) வாதி டிரஸ்டின் எந்த ஆவணங்களையும் படித்து பார்க்காமல் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சரவணன் என்பவர் குருசாமி கோவிலின் டிரஸ்டின் நிர்வாகி என்றால் சரிதான். அவர் இந்நீதிமன்றத்தில் எங்களுக்கு எதிராக அசல் வழக்கு எண்.49/2023 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் நாங்கள் எதிர் கட்சி செய்து வருகிறோம் என்றால் சரிதான். சாட்சி தற்போது மேற்படி சரவணன் குருசாமி கோவில் டிரஸ்ட் நிர்வாகி இல்லை என்றும் அசல் வழக்கு எண்.49/2023 தாக்கல் செய்யவில்லை என்றும் கூறுகிறார். 5 ஊர்களுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீமான் நாராயணன் பணிக்கர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட டிரஸ்ட் வாதி டிரஸ்ட் ஆகும். பழனிச்சாமி என்பவர் கடந்த 26.01.2023ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன் பின்னர் டிரஸ்ட் நிர்வாகிகள் ஒன்றுகூடி புதிய நிர்வாகியை தேர்ந்தெடுத்து செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல.

6) என் மீது டிரஸ்ட் வரவு செலவு கணக்குகளை ஒப்படைக்க கோரியும், தேர்தல் நடத்த கோரியும் விருதுநகர் மேற்கு காவல்நிலையம், துணை காவல் கண்காணிப்பாளர் விருதுநகர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விருதுநகர் ஆகியோருக்கு புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த புகார் மனுவின் பேரில் சமாதான கூட்டம் நடைபெற்றது என்றும், அதில் நான் கலந்து கொண்டேன் என்றால் சரியல்ல. சமாதான கூட்டத்தில் நானும், தாஸ், பிரதிவாதி துரைப்பாண்டி ஆகியோர்கள் தேர்தல் நடத்துவதாக கூறி கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. 31.01.2023ம் தேதி நிர்வாக தலைவர் ஜான்சன் என்பவருக்கு தேர்தல் நடத்தினால் செல்லாது என கூறி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரியல்ல. 06.01.2025ம் தேதி வாதி டிரஸ்டில்

தேர்தல் நடத்துவது குறித்து தினமலர் நாளிதழிலில் அறிவிப்பு கொடுத்தும், நிர்வாக உறுப்பினர்கள் ஆதார் அடையாள அட்டை பெற்றோம் என்றால் சரியல்ல.

7) என்னிடம் காட்டப்படும் 05.12.2024ம் தேதி தினமலர் நாளிதழில் எங்கள் டிரஸ்ட் மூலம் கொடுக்கப்பட்ட பொது அறிவிப்பு என்றால் சரிதான், மேற்படி பொது அறிவிப்பிற்கும் தாவா வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. அசல் வழக்கு எண்.82/2007 வழக்கானது மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், விருதுநகரில் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கை நான் காந்திமதி என்பவருக்கு எதிராக தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கில் கண்ட சொத்தை காந்திமதி என்பவருக்கு முன்பாக யார் அனுபவம் செய்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. காந்திமதியின் கணவர் மேற்படி சொத்தை அனுபவம் செய்து வந்தாரா என்றால் அது பற்றி தெரியவில்லை. காந்திமதி மேற்படி சொத்திற்கான வாடகை செலுத்தி வந்தார், வாடகை பாக்கி இருந்தது. காந்திமதி முறையாக வாடகை செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. 2004 காலகட்டத்தில் டிரஸ்டில் உள்ள இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு இடையே பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் தபால் மூலமாகவும், வங்கி மூலமாகவும் வாடகையை செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல.

8) டிரஸ்டில் உள்ள கிறிஸ்தவர்கள் பெயர்களை நீக்கம் செய்ததால் கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்களுக்கு இடையே டிரஸ்டில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி துரைபாண்டி எனக்கு முன்பாக வாதி டிரஸ்டில் நிர்வாக தலைவராக இருந்தார் என்றும், அதன் காரணமாக அவர் மீது வன்மம் கொண்டு இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. பிரதிவாதி வாடகையை முறையாக செலுத்திய பின்பும் அவர் மீது இதே போன்று பல வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நகராட்சி அலுவலக சாலையில் பிரதிவாதி துரைபாண்டி கடை வைத்திருந்தார் என்றும், மேற்படி கடை வாடகை சம்மந்தமாக இதே போன்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான், மேற்படி வழக்கில் நீதிமன்ற உத்தரவின் பேரில் கடை காலி செய்யப்பட்டது.

9) அசல் வழக்கு எண்.82/2007 என்ற வழக்கானது 18.03.2015 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்கள் தரப்பில் சரியான கட்சி இல்லை என்பதால் மேற்படி அசல் வழக்கு எண்.82/2007 ல் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கை திரும்ப நடத்துவதற்கு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி மீதுள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக வேண்டுமென்றே நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் டிரஸ்டில் வரவு செலவு கணக்குகளை ஒப்படைக்கவில்லை என்றும், நிர்வாக தேர்தலை முறையாக நடத்தவில்லை என்றும், அது குறித்து பிரதிவாதி என்னிடம் கேட்டு வந்ததால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பணிக்கர் டிரஸ்ட் உறுப்பினர்கள் தேர்தல் நடத்த கோரி என்னிடம் கூறிய போது நான் டிரஸ்டில் நிர்வாகி இல்லை என கூறினேன் என்றால் சரியல்ல.

10) பெரியசாமி வாதி டிரஸ்டின் முன்னாள் டிரஸ்டி என்றால் சரியல்ல. பெரியசாமி என்பவர் என்னிடம் டிரஸ்டில் வரவு செலவு கணக்கை கேட்ட போது நான் டிரஸ்ட் நிர்வாகி இல்லை என கூறினேன் என்றால் சரியல்ல. 2004 ம் வருடம் முதல் தற்போது வரை டிரஸ்டில் நான் வரவு செலவு

கணக்குகளை ஒப்படைக்கவில்லை என்றும், தேர்தல் நடத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தேர்தல் நடத்த சொன்ன நபர்கள் மீது இது போன்று வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் முறையாக வாடகை செலுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் டிரஸ்ட் சொத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் டிரஸ்டை சேர்ந்த மற்ற உறுப்பினர்கள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.